# ஆண்டாள் பிரிய தர்ஷினி சிறுகதைகளில் சமூகம் -ஒரு பார்வை

இரா.ஆ. கிருஷ்ணவேணி & முனைவர்.ஐ. சாந்திபாய்.
சாராள் தக்கர் கல்லூரி,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்திருநெல்வேலி

53

ஆய்வுச் சுருக்கம்

சமுதாயத்தில் பெண்ணும் ஒரு சமூக உயிராகக் கருதப்பட வேண்டியவள். எனினும் அவளது வாழ்க்கைச் சவால் நிறைந்ததாக இருக்கின்றது. சமுதாயத்தில் பெண்ணுக்கான வெளி ஆணாதிக்கத்தினால் தடைப்படுகின்றதா என்பதையும் , அத்தடைகளை எவ்விதம் ஒரு பெண் எதிர்கொள்கின்றாள் என்பதையும் , ஆண்டாள் பிரியதர்ஷினி தனது சிறுகதைகளில் எவ்வாறு பதிவு செய்து காட்டுகின்றார் என்பதையும் , விவரிப்பதாக இக்கட்டுரை அமைகின்றது. குறிப்படாக முதுகு , தோஷம் என்கின்றஇரு கதைகளின் பதிவுகளை இக்கட்டுரை தெளிவுபடுத்துகின்றது. இதன் வழி பெண்ணுக்கான வெளியை மீட்டெடுப்பதும் , விழிப்புணர்வை உருவாக்குவதும் கட்டுரையின் செல்நெறியாகும்.

**குறிச்சொற்கள்**

மனஅழுத்தம், சல்லடையானஉடல், அடையாளப்படுத்தல், கரிசனை, பாலினம், ஊடுருவுதல், ஆணாதிக்கம், இக்கட்டு, சாராம்சம்.

**முன்னுரை**

மனிதன் கூடி வாழத் தொடங்கிய அமைப்பே சமூகம் என்கிறோம். இச் சமூக அமைப்பில் வாழ்கின்றவர்கள் தங்களுக்குள் ஒன்று கலந்த உணர்வுடையவர்களாக வாழப் பழக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். சமுதாயத்தில் இருந்து தோன்றும் படைப்பாளன் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற படைப்பினை உருவாக்க முயல்கின்றர்ன். சமுதாயம் தனி மனிதனைப் பாதிக்கின்றது. இதனால் எழுகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தான் அவன் படைப்பாளனாக மாறுகின்றான்.

இது எல்லோருக்கும் அமைந்து விடுவது இல்லை. சமுதாயத்தை எழுத்துக்களால் சீரமைக்க வேண்டும் என்ற மனநிலை கொண்டவர்களுக்கு மட்டுமே இந்தப் படைபபுச் சிந்தனை கைகூடி வருகின்றது. அப்படித் தோன்றும் படைப்புகளானது ஆண் ,பெண், மாற்றுப்பாலினத்தவர் எனப் பலரும் பங்களிப்பினைச் செய்கின்றார்கள். அந்தவகையில் ஆண்டாள் பிரிய தர்ஷினி என்னும் படைப்பாளரின் சிறுகதைகள் அவருக்குள் எத்தகைய சமுதாயத்தாக்கத்தை உருவாக்கி இருக்கின்றது என்பதை ஆராய்ந்து பார்ப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**இலக்கியமும் வாழ்க்கையும்**

இலக்கியம் என்பது மனிதனுடைய வாழ்க்கையோடு இரண்டறக் கலந்த ஒன்றாகும். ஏனெனில் இலக்கியம் வாழ்க்கையின் சாராம்சத்தையே பிரதிபலிக்கின்றதாக இருக்கின்றது. இலக்கைக் காட்டுவது இலக்கியம் என்பார் சாமி.சிதம்பரனார். அந்த வகையில் மனித வாழ்க்கை செல்கின்ற தடத்தைக் காட்டுகின்றதாக இலக்கியம் தொடர்கின்றது என்று கூறலாம். மனிதன் மனிதனாக வாழத் தடையாக இருக்கின்றவற்றை சுட்டிக்காட்டுவது , நீக்குவது, இலக்கியத்தின் பணி எனலாம். படைப்பாளனின் பணியானது இலக்கியம் படைப்பதோடு நின்றுவிடுகின்றது. அதன் பின்னர் அவன் செய்ய வேண்டிய பணியினை அவனது படைப்பு செய்யத் தொடங்குகின்றது. இதுதான் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்குமான தொடர்பாக இருக்கின்றது.

ஒரு இலக்கியத்தை வாசிக்கும் போது அது மனித மனத்தை ஊடுருவுகின்றது. சிந்தனை வரை சென்று மனிதனுக்குள் வேலை செய்யத் தொடங்குகின்றது. எனவே மனிதன் தன்னுடைய வழக்கமான பாதையிலிருந்து தடம் மாறுகின்றான். தன்னைச் சரி செய்து கொள்கின்றான். தன்னைத் தவறுகளில் இருந்து விலக்கிக் கொள்கின்றான்.

இலக்கியம் உள்ளத்தில் இருந்து எழுகின்றது. உள்ளத்தில் சென்று தன் பணியைத் தொடர்கின்றது. அத்தகைய இலக்கியங்கள் சிறுகதையாக ,நாவலாக, கவிதையாக,நாடகமாக உருவாகித் தம் பணியைச் செம்மையாகச் செய்கின்றன. இலக்கியத்திற்கும் மனித வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதையும் படைப்பாளனுக்கும் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையே உண்டான இந்த இழையோட்டத்தில் தான் மனிதன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான்.

சமூகம் என்பதன் விளக்கம்

சமூகம் என்பது மக்கள் கூடி வாழ்கின்ற அமைப்பு ஆகும். இதனை 'ஒரு நிலப்பகுதியில் நிலையாகக் கூடி வாழும் பெரும் திரளான மக்கள் அதாவது தம்மைப் பேணிக்காத்துக்கொள்வதற்கும் , அழியாமல் நிலைநிறுத்திக் கொள்வதற்கும் ஒன்றாக இணைந்துள்ள ஒரு மனிதக் குழு சமூகம் எனப்படுகின்றது என்று விளக்குகின்றது கலைக்களஞ்சியம். '1 மேலும் இதுகுறித்து மற்றொரு விளக்கத்தையும் காணலாம் 'ஒரு சிறு நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை முறையைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமூகம் எனப்படும்'2என்கின்றது வாழ்வியல் களஞ்சியம்.

பெண்ணியமும் -ஆணாதிக்கமும்

பெண் தனக்கான சுதந்திரத்தையும் , உரிமையையும் மீட்டிடவேண்டி மேலைநாடுகளில் ஏற்பட்ட பெரும் புரட்சியே பெண்ணியம் என்பதாகும். பெண்ணடிமைத்தனத்தில் இருந்து அவளை மீட்க அவள் மீது சுமத்தப்பட்டு இருந்த பல்வேறு வரையறைகளை உருவாக்கிய அமைப்புமுறையே ஆணாதிக்கம் என்று அறியப்பட்டது.'பெண்ணியம் என்பது ஒடுக்கப்பட்ட ஒரு பிரிவினரான பெண்களின் விடுதலைச் சித்தாந்தமே'3 என்கின்றார் கெய்ல்ஓம்வெட். 'பெண்ணியக்கருத்தாக்கமானது குடும்பம் என்கிற ஒரு இயற்கைபிரிவை உடைத்துவிட்டு ஒரு கருத்தாக்கம் கொண்ட சமூக உறவுகளும் பண்பாட்டு வடிவம் மற்றும்அhத்தங்கள் கொண்ட நிறுவனக் கூட்டமைப்புக் கொண்ட ஒரு சமூகப் பிரிவாக மறு கட்டமைக்கிறது.'4 என்கிறார் கோவிந்த் கேல்கர்

**பெண்ணாகப் பெண்ணைப் பார்க்கும் படைப்பு**

இலக்கியத்திற்கும் மனித வாழ்க்கைக்குமான தொடர்பானது மனிதனைக் கரிசனையோடு பார்க்கும் பார்வையைக் கொண்டதாக இருக்கின்து. ஒவ்வொரு பாலினத்தையும் அதற்கு ஏற்ற பார்வையில் பார்த்து அவற்றின் துயரத்தைக் களைகின்றதாக அமைந்துள்ளது ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகளும் இத்தகைய தன்மை கொண்டவையாக இருக்கின்றன. பெண்ணின் வலியைப் பெண்ணாக இருந்து பார்க்கும் படைப்பாக இவை அமைந்துள்ளன. பெண்ணை இச் சமுதாயம் என்ன மாதிரியான பார்வையில் பார்க்கின்றது என்பதை அறிந்து பெண்ணுக்கு ஏற்படும் மனதின் வலியைத் தன்னுடைய எழுத்துக்களில் முன்வைப்பதாக இவரது சிறுகதைகள் அமைந்துள்ளன

தோஷம் சிறுகதையில் சமுதாய மனிதர்கள்

தோஷம் என்ற சிறுகதையில் வருகின்ற சமுதாய மனிதர்கள் பெண்ணைக் காயப்படுத்துபவர்களாக இருக்கின்றனர். கல்யாணலட்சுமிக்கு மிகப்பெரிய ஆலோசனை சொல்பவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்கின்றனர். அவளுக்குத் துணை புன்னகை மட்டுமே என்று ஆண்டாள் பிரியதர்ஷினி பெண்ணின் நுட்பமான மனநிலையைப் பதிவுசெய்கின்றதைக் காணலாம். 'நீங்கள் சந்திக்க வேண்டிய சமூகப்பிரச்சினைகள் ஏராளம்.காறி உமிழ்வார்கள்.வார் ;த்தையால் விளாசுவார்கள். ஊர்ப்பிரஷ்டம் செய்வார்கள். அது தரும் மன அழுத்தம் உங்களையே சிதைக்கக்கூடும். எல்லாவற்றையும் நினைப்பில் வையுங்கள் வாழ்த்துக்கள். ஆலோலசனை சமயங்களிலெல்லாம் மந்திரமாக ஓதப்பட்ட விஷயம் தான். இன்று மொத்தமாகச் சொன்ன பேர்து சிரிப்பைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டாள் கல்யாணலட்சுமி ' என்று ஆண்டாள் பிரியதர்ஷினி பெண் எதிர் கொள்கின்ற சமுதாயப் பேச்சுக்களைப் பதிவு செய்கின்றார்.

பெண் என்றதும் பலரும் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் மந்திரங்களைப் போல அள்ளி வீசுகின்றனர். காறி உமிழ்கின்ற பண்புடையவர்களாக இருக்கின்றனர். சொல்லால் அடித்து விளாசுகின்ற மனிதநேயமற்ற சிந்தனை உடையவர்களாக இருக்கின்றனர். இக்கருத்தை ஒரு பெண் மருத்துவர் கல்யாண லட்சுமியிடம் சொல்கின்றார். இந்நிலையில் அம் மருத்துவரது கையைப் பிடித்து முத்தம் தருகின்றாள்.

பெண்ணாக இருந்து பெண்ணுக்கு நேருகின்ற கொடுமைகளைப் பதிவு செய்து காட்டுகின்ற கதையாகத் தோஷம் சிறுகதை இருக்கின்றது.

'இத்தனை வயது வரை என்னைத் துரத்தாத சமூகப் பிரச்சனையா டாக்டர் ? சமூகம் துளைத்துப் பார்த்தே என் உடம்பு முழுசும் சல்லடையாகிவிட்டது. அது தராத மன அழுத்தமா ? சமூகத்தைக் குப்பைத் தொட்டியில் போடுங்கள். காறி உமிழும் அதன் எச்சில் காய்ந்திடும். குதர்க்க வார்த்தைகள் ஓய்ந்துவிடும். ஆனால், இந்தவரம் - ஜென்ம சாபல்யமல்லவா ? மரித்துப் போய் இருந்த எனக்கு உயிரூட்டி இருக்கிறீர்கள் நன்றி டாக்டர்...'

சமூகம் சரஸ்;வதியின் உடலைச் சல்லடையாக்கி இருக்கின்றது. மன அழுத்தத்தைக் கொடுத்திருக்கி ;ன்றது. இருந்தாலும் அதைக் குப்பைத்தொட்டியில் போட வேண்டும் என்கின்றாள்.அதன் எச்சிலையும் , குதர்க்க வார்த்தைகளையும் ஒதுக்கித் தள்ள வேண்டும் என்கின்றாள். இப்படிச் சமுதாயம் தன்னை நெருக்குகின்ற சமுதாயத்தைச் சாடுகின்றாள்.

பெண் படைப்பாளர்களை ஒதுக்கும் சமுதாயம்

படைப்பாளர்கள் என்பவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். அவர்கள் கவிஞர்களாக உருவான பின் அவர்களை இந்தச் சமுதாயம் அங்கீகரித்தால் தான் அவர்கள் கவிஞர்களாக முடியும். கவிதையை விற்றுத் தன் எழுத்துக்கு அடையாளம் தேட முயற்சிக்கின்ற படைப்பாளர்களுக்குச் சமுதாயம் என்ன பதில் சொல்கின்றது என்பதை இந்த முதுகு என்கின்ற கதையில் ஆண்டாள் பிரியதர்ஷினி உணர்த்துகின்றார் சரஸ்வதி என்கின்ற பெண் கவிஞராகத் தன்னை அடையாளப்படுத்த முயற்சிக்கின்றாள். ஆனால் அதற்கு அவள் அதிகமான விலை கொடுக்க வேண்டியது இருக்கின்றது. 'ரெண்டு வேளை சோறு , காபி,டீ,மளிகைச் சாமான்,வருஷத்துக்கு ஒருமுறை வாங்கும் நூத்தி ஐம்பது ரூபாய் புதுப்புடவை , ஐநூறு ரூபாய்க்கு வாங்கும் குந்து மணி தங்கம் , எல்லாவற்றையும் மிச்சப்படுத்தினாலும் கூட முழுசாய் ஆயிரத்துக்கும் மேல் சேர்க்க முடியாத சில்லறை வாழ்க்கை. இதில் இருபதாயிரம் ,முப்பதாயிரத்துக்கு என்ன பண்ண ? யாரிடமும் கையேந்த முடியாதே.... ஆனாலும் நன்கொடை கொடுத்து உதவுங்கள் என்று கூட ஒருதரம் பத்திரிக்கை விளம்பரம் கொடுத்தாள். ம்ஹீம் பிரயோஜனம் இல்லை விளம்பரச் செலவுதான் மிச்சம். பத்துப் பைசா கூடப் பெயரவில்லை.'இப்படி சரஸ்வதியைச் சுற்றிலும் இருக்கின்ற சமுதாயமானது அவளை அன்றாட வாழ்க்கையை வாழ்வதற்கே நெருக்கடி தருவதாக அமைந்திருக்கின்றது. பணத்தைச் சேமிப்பதற்காக அவள் பலவற்றைத் தியாகம் செய்தாலும் கூட , அவளால் அவளது கவிதைப் புத்தகத்திற்கான பணத்தைத் திரட்ட முடியாதவாறு அவளைச் சமுதாயம் நெருக்குகின்றது.

'சினிமாக் கவிஞனோட கவிதைப் புஸ்தகம்னா சீக்கிரமா மூவ் ஆயிடும். உங்களை மாதிரி பத்திரிகைல எழுதின தொகுப்பை எப்படித் தள்ளிவிட ? யாரு வாங்குவாங்க ? எலி கடிக்காம காப்பாத்தி வித்து முடிக்கிறதுக்குள்ள தாவு தீந்துடும். லைப்ரரி ஆர்டர் வாங்குறதுக்குள்ள தாலி அறுந்துடும். '

சரஸ்வதியை யார் அடையாளப்படுத்துவது ? அதற்கான பொறுப்பு யாரிடம் இருக்கின்றது ? சமுதாயம் ஏன் சினிமாக் கவிஞர்களின் பின்னே ஓடுகின்றது ?. இப்படிப் பல கேள்விகளை எழுப்பி அதற்கு விடைதருகின்றார் பிரியதர்ஷினி. சமுதாயம் பொறுப்பில்லாமல் இருக்கின்றது. தான் போகின்ற பாதையில் சினிமாக்காரர்களை மட்டுமே அது கையில் எடுத்துக் கொள்கின்றது. கவிதை நூலை விற்பனை செய்ய வழி இல்லை. அதை வாங்கிப் படித்துக் கவிஞனை அங்கீகாரப்படுத்தவும் சமுதாயம் முன் வரவில்லை. படைப்பாளனுடைய அன்றாடத் தேவையை ,மருத்துவச் செலவு போன்ற பெரிய பணத் தேவைகளைச் சந்திக்க சமுதாயம் தயாராக இல்லை என்பதைக் கதை விளக்குகின்றது.

'லேடீஸ் எழுதுறதுல வேறென்ன புதுசா சொல்லப் போறீங்க ? புருஷங்காரன் கொடுமை , ஆண் ஆதிக்கம்,குழந்தை,பிரசவம்,தீட்டு, கண்ணீர் இதுதானே ? பெண் உரிமை , சுதந்திரம்ன்னு வேற புலம்புவீங்க... சரஸ்வதியின் கவிதைக் கூறுகள் ஆழ்மன வலிகள்- வியாபாரத் தனமாய்க் கிண்டலடிக்கப்பட்டன. அலட்சியமாய்ப் புரட்டப்பட்டன அவளின் ஆருயிர்க் கவிதை ஏடுகள்.'

பெண் படைப்பாளர்கள் சமுதாயத்தின் ஆணாதிக்கத்தினரால் மிகவும் மோசமான தரமற்ற நிலையில் மதிப்பிடப் படுகின்றனர். சரஸ்வதியின் கவிதையானது எதைப் பற்றிப் பேசுகின்றது என்பதைப் பொதுவாகப் பேசுவதைப் போல , பெண்கள் அனைவரையும் மொத்தமாகப் பேசுவதாக அமைகின்றது. இவ்வாறு சமுதாயத்தில் பரவிக் கிடக்கின்ற ஆணாதிக்கவாதிகளின் போக்கானது பெண் எழுத்துக்களை விமர்சிக்கின்ற வகையில் அமைந்துள்ளது.

சமுதாயத்தினால் பெருகும் அங்கலாய்ப்பு

சமுதாயம் பெண்ணை அங்கலாய்க்க வைக்கின்றது. அவளது புலம்பலைக் கேட்காமல் கலங்கச்செய்கின்றது. பெண்ணுக்கான இடத்தை வழங்கத் தயாராக இல்லை. பஞ்சாங்கம் என்பதை வைத்துக்கொண்டு பெண்ணையும் அவளது மனதையும் நோகடிக்கின்ற செயலைச் செய்கின்றது சமுதாயம்.'ஒற்றை ஜீவனாகவே மரித்து விடுவேனா ? என் அன்பை , என்நேசத்தை, என் பிரம்மையை , என் காதலை, என் ஸ்நேகத்தை , ஸ்வீகரிக்க ஜீவனே கிடையாதா ? கிடைக்காதா? எனக்கான வேர்ப்பிடி மண் இல்லாமல் தரிசாகத்தான் போவேனா ? அம்மா. வீட்டில் பல்லியும் பாசியும் ஒட்டடையும் ஸ்டெனோ குறிப்பேடும் தான் என் சுவாசத் துணையா ? உயிரோடு மனசோடு உணர்வோடு நெருங்க யாருமே இல்லாத அநாதைப் பிறப்பா நான் கண்ணீரில் மூழ்குவாள் கல்யாண லட்சுமி. ' கல்யாண லட்சுமி தன்னுடைய மனதில் கேட்டுக் கொள்கின்ற கேள்விகளை பிரிய தர்ஷினி முன்வைக்கின்றார். ஒவ்வொரு பெண்ணும் சமுதாயத்தினால் தோஷம் என்கின்ற பெயரில் காயப்படுத்தப் படுகின்றாள். அவளால் இந்த இக்கட்டில் இருந்து மீண்டு வரவே இயலாது. ஏனெனில் அவளைச் சுற்றிலும் ஆணாதிக்கத்தின் கருத்தியல் கலந்து கிடக்கின்றது. என்பதைப் பதிவு செய்து காட்டுகின்றார்.

**முடிவுரை**

ஆண்டாள் பிரியதர்ஷனி அடையாளப்படுத்துகின்ற சமுதாயமானது பெண்களை ஒடுக்குகின்ற சமுதாயமாக இருக்கின்றது. பெண்ணைக் காயப்படுத்துகின்ற சமுதாயமாக இருக்கின்றது. பெண்ணுக்கான அடையாளத்தை அழிக்க நினைக்கின்ற ஆணாதிக்க தன்மை விரவிக் கிடக்கின்ற சமுதாயமாக இருப்பதைக் கதைகளின் வழியாகப் பதிவு செய்து காட்டுகின்றார் படைப்பாளர்.

**அடிக்குறிப்புகள்**

1.கலைக்களஞ்சியம் தொகுதி எட்டு ப -588

2.வாழ்வியல் களஞ்சியம் தொகுதி எட்டு ப-559

3.தலித் பெண்ணியம் ஓர் அறிமுகம் - மோகன் லார்பீர் -ப 4

4.மேலது ப -4

5.தோஷம்-355

6தோஷம் - 356

7.முதுகு ப-168

8.முதுகு -ப 169

9.முகுகு-169.

10.தோஷம்- 357

**துணைநூல் பட்டியல்**

1.அன்புக்கரசி -மோகன்லார்பீர் (தொ.ஆ) - தலித்பெண்ணியம் 1997-தலித் ஆதார மையம்- தமிழ்நாடு இறையியல் கல்லூரி - மதுரை

2.ரகுநாதன்- இலக்கிய விமர்சனம் -1948 -மீனாட்சி புத்தக நிலையம் - மதுரை

3.ஆண்டாள் பிரியதர்ஷினி - ஆண்டாள்பிரியதர்ஷினி சிறுகதைகள் தொகுப்பு - 2009-ஏகம் பதிப்பகம் - சென்னை